# தேர்தல் ஆணைக்குழு

## பதவி வெற்றிடம் - சட்ட அலுவலர் பதவி

தேர்தல் ஆணைக்குழுவின் சட்ட அலுவலர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஓராண்டு காலப்பகுதிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக விண்ணப்பம் கோரப்படுகின்றது.

**விண்ணப்பதாரிகள்:-**

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
- பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கான உடல் மற்றும் உள ஆரோக்கியமுடையவராக இருத்தல் வேண்டும்.
- சிறந்த நன்னடத்தை உடையவதாக இருத்தல் வேண்டும் அத்துடன்
- 21 வயதுக்கு மேற்பட்டவராகவும் 45 வயதுக்குக் குறைந்தவராகவும் இருத்தல் வேண்டும்.

**கல்வி மற்றும் தொழில் தகைமைகள்:-**

01. இலங்கையின் உயர்நீதிமன்ற சட்டத்தரணியொருவராக இருத்தல் வேண்டும்.

**அனுபவம்:**

உயர்நீதிமன்ற சட்டத்தரணியொருவராக சத்தியப்பிரமாணம் செய்த பின் மூன்று (03) ஆண்டுகளுக்குக் குறையாத முனைப்பான தொழில் அனுபவம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.

*அல்லது*

உயர்நீதிமன்ற சட்டத்தரணியொருவராக சத்தியப்பிரமாணம் செய்த பின் அரச நிறுவனமொன்றில் சட்டத்துறையில் 03 வருடங்களுக்குக் குறையாத பின்வரும் கருமங்கள் சார்ந்த அனுபவமொன்றைப் பெற்றிருத்தல் வேண்டும்:

(அ) வழக்கு நடவடிக்கைகளுக்காக நீதிமன்றத்தில் தோன்றுதலும் அவற்றுக்குரிய சட்ட நடவடிக்கைகளை எடுத்தலும்.

(ஆ) சட்டமா அதிபர் திணைக்களத்துடன் ஒருங்கிணைப்பு அலுவல்களை மேற்கொள்ளல்.

(இ) ஒப்பந்தங்கள் சம்பந்தமான சட்ட நடவடிக்கைகள்.

(ஈ) தொடர்புடைய சட்டதிட்டங்கள் சம்பந்தமான சட்ட நடவடிக்கைகள்.

(உ) சட்ட வரைவுகள், சுற்றுநிருபங்கள், ஒழுங்குவிதிகள் போன்ற சட்ட ஆவணங்களை வரையும் அலுவல்கள்.

(ஊ) பல்வேறு நியதிச்சட்ட நிறுவனங்களினால் முன்னெடுக்கப்படும் சட்ட நடவடிக்கைள் அல்லது விசாரணை நடவடிக்கைகள்

இப்பதவிக்கு ரூ.47,615-10x1,335-8x1,630–17x2,170–110,895/- என்ற மாதாந்த சம்பள அளவுத்திட்டம் உரித்தாகுமென்பதுடன், தேர்தல் ஆணைக்குழுவினால் செலுத்தப்படும் வேறு படிகளுக்கும் அவர் உரித்துடையவராவார். மேலும் தகுதிகள் மற்றும் அனுபவங்களின் அடிப்படையில் கலந்தாலோசித்து தகுந்த சம்பளப் படிநிலையில் நிறுவுதல் பற்றி பரிசீலிக்க முடியும்.

**ஒப்பந்தக் காலம்: 01 வருடம்.**

தேர்தல் ஆணைக்குழுவின் ஒருப்பாட்டுடன் சேவையின் தேவையின் அடிப்படையில் ஒப்பந்தக் காலத்தை நீடிப்பது குறித்து பரிசீலிக்கப்படலாம்.

தனது சுய விபரக்கோவை மற்றும் சான்றிதழ்களின் பிரதிகளுடன் **2021 மே மாதம் 11** ஆந் திகதி அல்லது அத்திகதிக்கு முன்னர் தேர்தல் ஆணைக்குழுவின் செயலாளருக்குக் கிடைக்கக்கூடிய வகையில் பின்வரும் முகவரிக்கு விண்ணப்பங்களை அனுப்பிவைத்தல் வேண்டும்.

செயலாளர்,<br>
தேர்தல் ஆணைக்குழு,<br>
சரண மாவத்தை,